## பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக

# மெட்ரோ நிலையங்களில் பிப்.2ல் ஓவியப்போட்டி

சென்னை, ஜன.26: மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 2ம் தேதி (ஞயிற்றுக்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள் மெட்ரோ பயணிகள் பார்வைக்கு பிப்ரவரி 3ம் தேதி முதல் வைக்கப்படும்.

பிப்ரவரி 9ம் தேதி சென்ட்ரல் மெட்ரோவில் பிறபகல் நடத்தப்படும் விழாவில் வெற்றியாளர்களுக்கு ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படும். போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் வரும் 29ம் தேதி முதல் பதிவு செய்யலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.